தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-4-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மொழியும் பண்பாடும் தான் மக்களை இணைக்கும்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 105வது மாணவர் மன்றத்தின் சார்பாக முத்தமிழ் விழா இன்று (16-4-2016) பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் சிறப்புற நடைபெற்றது. விழாவின் முக்கிய விருந்தினர்களாக பிரபல எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் மற்றும் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவினை துவக்கி வைத்து பேசிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் நாம் கடந்து போகும் பாதையில் தடம் பதிக்க வேண்டும். தடம் பதிக்க, அவ்வாறு வாழ்ந்த மனிதர்களின் வாழ்வினை படித்தாக வேண்டும். வெறும் பார்வையாளர்களாக நிகழ்வுகளை கடந்து விடாமல், கண்களால் உள்வாங்கிய கூறுகளை எழுத்தால், சொல்லால், சிந்தனையால் வெளிப்படுத்த வேண்டும். அதற்குரிய சிறந்த களமாக இதனை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். செயல்வன்மை மிக்க மாணவர்களாகிய நீங்கள் தமிழ் மொழியால் மட்டுமே நமது தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு நெருக்கமாக கொண்டு செல்ல இயலும். எனவே, தொழில்துறை சார்ந்த பல்கலைக்கழகங்களில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மட்டுமே தமிழை எப்போதும் ஒரு பாடமாகவே வைத்திருக்கிறது. மாணவர்கள் கம்பரின் ஏரெழுபதினையும் கற்க வேண்டும், நவீன இயந்திர சொல்லாடல்களையும் கற்க வேண்டும் என்று கூறினார்.

சிறப்புரையாற்றிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் மாணவர்கள்அவர்களின் சக்தியினையும், ஆற்றலையும் முழுமையாக உணராது, கருவிகளின் துணை கொண்டு வாழ்வின் சவால்களை எதிர்கொள்ள தயாராகும் போது, போதிய ஆயத்தமின்றி அல்லலுறுகின்றனர். அடிப்படை விஷயங்களைப் பற்றிய புரிதல்கள் எதுவுமின்றி பாடத்திட்டம் என்ற சட்டத்திற்குள் மாட்டிக் கொண்டு அதில் உள்ளவற்றை மட்டுமே எந்தவொரு ஈடுபாடும் இல்லாமல் கற்கும் போது, தத்தமது தனித்திறன்களை வெளிப்படுத்த வழி ஏதும் இல்லாமல் முடங்கிப் போய் விடுகின்றனர்.

கடந்த 30 வருடங்களில் அதாவது இன்றைய இளம் தலைமுறையினரின், நினைவாற்றல் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது. தொடர் முயற்சியும், ஈடுபாடும், நம்மை சுற்றி நடப்பதன் மீதான அக்கறையுமே நம் வாழ்வினை அர்த்தப்படுத்தும் என்றார்.

தொடர்ந்து பேசிய கவிஞர் கவிதாசன் அவர்கள் தினம் தினம் புத்தகம் படிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். புரட்டி புரட்டி படிப்பதல்ல புத்தகம், உங்களையே புரட்டி போடுவதுதான் புத்தகம் என்றார். நம் முன்னோர்கள் மேலும் பல்வேறு கவிஞர்களின் கவிதைகளை மேற்கோள் காட்டி பேசியவர் மாணவர்களின் மனப்பான்மையும், கூட்டாற்றலும் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த இது போன்ற விழாக்கள் பயன்படும் என்றார்.

விழாவுக்கு வாழ்த்துரை வழங்கிய தமிழ்நாடு வோளண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) முனைவர் ச. மகிமைராஜா அவர்கள் முத்தமிழுடன், அறிவியல் தமிழ் மற்றும் கணினித்தமிழினையும் சேர்த்து ஐந்தமிழாகக் கொள்ள வேண்டும் என்றார்.

இந்த விழாவின் ஒரு பகுதியாக மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான பொழில் என்னும் இதழினை எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் மற்றும் கவிஞர் கவிதாசன் அவர்கள் வெளியிட துணைவேந்தர் கு. இராமசாமி மற்றும் முனைவர் ச. மகிமைராஜா அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

முன்னதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக 105வது மாணவர் மன்ற செயலர் செல்வி. சு. ஆதிரா அவர்கள் வரவேற்புரையும் பொது செயலர் செல்வன். த. சங்கர் அவர்கள் நன்றியுரையும் ஆற்றினார்கள்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்